MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# இலக்கணிகளின் பார்வையில் பெயர்ச்சொற்கள்

திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி,
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி,சிவகாசி.
lavanyavellai10@gmail.com - 7639770943

DOI 10.5281/zenodo.14788518.

**Abstract:**

Language, which is formed by sounds and letters, develops in two stages, spoken language and written language. On the basis of grammar, Tamil words are divided into nouns, verbs, interjections, and pronouns, and on the basis of literature, they are divided into four categories. Nouns are the primary focus of words. "All grammarians have mentioned the noun in Tamil as well,"1 which is worth noting here. This article aims to explain the views of grammarians, the views of linguists, and the interpretations given by dictionaries regarding such nouns.

Key Words : Language - Noun - Grammar - Tholkappiyam - Nannool

ஒலியாலும் எழுத்தாலும் உருவாகும் மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என்ற இருநிலைகளில் வளர்ச்சி பெறுகின்றது. தமிழ்ச் சொற்களை இலக்கண அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என்றும், இலக்கிய அடிப்படையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்றும் பிரிப்பர். இவ்வாறு தமிழ்ச் சொற்களை நான்காகப் பகுப்பர். சொற்களில் பெயர்ச்சொற்களே முதன்மையாகச் சுட்டப்படுகின்றது. "தமிழ் மொழியிலும் எல்லா இலக்கண நூலாரும் பெயரையே முன் வைத்துக் கூறியுள்ளனர்."[1] என்று தமிழ்மொழி இலக்கண இயல்புகள் என்னும் நூலில் அ.சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அத்தகைய பெயர்ச்சொல் குறித்த இலக்கணிகளின் கருத்துக்களையும், மொழிநூலார் கருத்துக்களையும், அகராதிகள் கூறும் விளக்கத்தையும், விளக்குவதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**சொல் விளக்கம்**

பழங்காலத்தில் மக்கள் தங்களுடைய கருத்துக்களை ஒலிக்குறிப்புகள் மூலமாக வெளிப்படுத்தினர். ஒலிக்குறிப்புகள் சொற்களாகின. பின்னர் காலப்போக்கில் மொழிகள் மக்களிடையே தோன்றின. இவ்வாறு தோன்றிய மொழியின் சொற்களைக் குறித்து அறிஞர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளனர். சொல், பதம், கிளவி, மொழி என்பன ஒரே பொருளுடையன. "சொற்கள் முதன்முதலில் தோன்றிய காலத்தில் திருத்தமான அமைப்பு பெறாமலிருந்து காலப்போக்கில் காலம் வளர வளர மாறி நன்றாக அமைந்துள்ளன"[2] என்பார் மு.வ."தனித்து நின்று பொருள் தருகின்ற மிகச்சிறிய மொழிக்கூறு 'சொல்'"[3] என்று ப்ளூம்பீல்டு கூறுவதாகவும் "இடைவெளிக்கு இடையே தோன்றும் உருபு மற்றும் உருபுத் தொடர்களைச் சொற்கள் எனலாம்"[4] என்று ஹாக்கெட் கூறுவதாகவும் செ.சண்முகம் அவர்கள் தமது நூலில் பதிவு செய்துள்ளார். எனவே பொருள் தரும் மிகச்சிறிய மொழிக்கூறு சொல் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**சொல் - இலக்கணிகளின் கருத்துக்கள்**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

சொல் குறித்து இலக்கணிகள் பல்வேறு கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். தொல்காப்பியர் பொருளைக் குறித்தே எல்லா சொற்களும் செயல்படும் என்று விளக்கியுள்ளார்.

**“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”** **(தொல்.சொல்.நூ155)**

என்ற நூற்பா பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்லாகிய நால்வகைச் சொற்களும் பொருள் குறித்து வரும் தன்மை இதனால் புலனாகின்றது. மேலும் ஒரு சொல்லால் அதன் கருத்துப் பொருளையும் இலக்கணப் பொருளையும் அறிய முடியும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். இதனை,

**“பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லி னாகும் என்மனார் புலவர்.”(தொல்.சொல்.நூ156)**

என்ற நூற்பா வாயிலாக அறிய முடிகிறது

எழுத்து தனித்தும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து நின்றும் பொருள் தருமாயின் அது பதமாகும். சொல்லிற்குரிய வேறு பெயர்கள் பதம், கிளவி, மொழி, வார்த்தை போன்றவையாகும்.

எழுத்துக்கள் இணைந்து உருவாவதே சொல் அச்சொல் சொற்பொருள், இலக்கணப் பொருள் என்ற நிலையில் பொருள் உணர்த்தி வருகின்றது. சேனாவரையர் **“பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே பொருள் குறியாது நில்லா”**[5] என்கிறார். **“மரபிலக்கணங்கள் சொற்களைப் பின்வரும் மூன்று அடிப்படைகளில் விளக்கியுள்ளன.”**[6]

1.அமைப்பு
2.பயன்பாடு
3.பொருள்

சொல் என்பதற்கு எழுத்துக்கள் இணைந்து உருவாகிய அமைப்பு என்பது அடிப்படையிலான விளக்கமாகும். சொற்கள் அவை தோன்றும் சமுதாயச் சூழலின் அடிப்படையில் வரையறை செய்யப்படுகின்றன என்பது பண்பாடு தழுவிய விளக்கமாகும். ‘பொருள் தரும் சிறு கூறே சொல்’ என்ற விளக்கம் பொருள் அடிப்படையிலான விளக்கமாகும். இவ்வாறு மேற்கண்ட மூவகைச் சூழலின் அடிப்படையில் மரபிலக்கணங்கள் சொற்களுக்கு விதிகளை அமைத்துள்ளன.

**அகராதிகளின் கருத்து**

ஒரு சொல்லுக்குரிய பொருளை அறிந்து கொள்ள அகராதியைப் பயன்படுத்துகிறோம்.க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி **“பொருள் குறிக்கும் ஒலி அல்லது ஒலிகளின் தொகுதி, வார்த்தை, (word, term)”**[7] என சொல்லுக்கு பொருள் விளக்கம் தருகின்றது. இலக்கியச் சொல்லகராதி “**நெல்லு, புகழ் (சிந்)**”[8] சொல்லுக்கு பொருள் விளக்கம் தருகின்றது. தம்பியின் தமிழ் அகராதி **“மொழி, பேச்சு, புகழ், தீமொழி, கட்டளை, அறிவுரை”**[9] என சொல்லுக்கு பொருள் விளக்கம் தருகின்றது. எனவே சொல் என்பது பொருள் குறிக்கும் ஒலி அல்லது ஒலிகளின் தொகுதி என்று அறிய முடிகிறது. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவை சொல்லின் வகைகள்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**சொல்லின் பாகுபாடு**

தொல்காப்பியர் சொல்லின் வகைகளை விளக்கியுள்ளார். தொல்காப்பியர் சொற்களை நான்காகப் பகுக்கிறார்.

**"சொல்லெனப் படுப பெயரே வினையென்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" (தொல்.சொல்.நூ.158)**
**"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப" (தொல்.சொல்.நூ.159)**

என்ற நூற்பாக்கள் சொற்களின் வகைகளை உணர்த்துகின்றன. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று சொற்களைத் தொல்காப்பியர் நான்காம் பகுக்கிறார்.

சொற்கள் அவை வழங்கப்பெறும் தகுதியின் அடிப்படையில் இயற்சொல், திரிச்சொல், திசைச்சொல், வடச்சொல் என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று**
**அனைத்தே செய்யுளீட்டச் சொல்லே" (தொல்.சொல்.நூ.397)**

என்ற நூற்பா வாயிலாகத் தொல்காப்பியர் இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும் என நான்கும் செய்யுள் இயற்றுதற்குரிய சொற்களாகும் என்கிறார்.

**சொல்லின் பாகுபாடு பற்றி அறிஞரின் கருத்துக்கள்**

கமில்சுவலபில் தமிழ்ச்சொற்களைப் பெயர், வினை, அடை, மாறிலிகள் என நான்காகப் பாகுபடுத்தியுள்ளார்.ஹாக்கெட் கூறும் விதிமுறைகளின் அடிப்படையில் மோ.இசரேயல் சொற்களைப் பெயர், வினை, பெயருரிச்சொல், வினையுரிச்சொல், ஒரு நிலைச்சொல் என ஐந்தாகப் பாகுபடுத்தியுள்ளார். ஆஷர் சொற்களைப் பெயர், மாற்றுப்பெயர், வினை, பெயரடை, பின்னுருவு (சொல்லுருபு), ஒரு நிலைச்சொல் என ஆறாகப் பாகுபடுத்தியுள்ளார். பொன்.கோதண்டராமன் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, பெயரடை, வினையடை, வல்லடை, இணைப்பான், உணர்வு வெடிப்புச்சொல், உணர்வுக் குறிப்புச்சொல், விளிப்புச்சொல், விளி ஏற்புச்சொல் என பத்தாகப் பாகுபடுத்தியுள்ளார். லேமென் சொல்திரிபுப் பண்பு, தொடரியல் பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, பின்னுருபு, பெயரடை, வினையடை, அளவடை, வரையறு அடை, இணைப்புச் சொல் என எட்டு வகையாகப் பாகுபடுத்தியுள்ளார்.

**பெயர்ச்சொல் - இன்றியமையாமை**

தொல்காப்பியர் சொற்பாகுபாட்டில் பெயர், வினையே முதன்மையானவை. **"ஊமையர் கைக்குறிப்புடன் ஏதேதோ ஒலிகளையெழுப்பிக் கருத்தறிவிக்க முயல்வது போலவே முதற்காலத்து மாந்தரும் கைக்குறிப்புடன் ஏதேதோ உக்குரலிட்டே கருத்தை அறிவித்துக் கொண்டனர். அவர்கள் எந்தப் பொருளைக் காட்டி என்ன ஒலி எழுப்பினார்களோ அந்த ஒலி அப்பொருளின் பெயராயிற்று அந்த ஒலிப்பகுதி பிற்காலத்தில் இலக்கணத்தில் பெயர்ச்சொல் எனப்பட்டது என்று பெயர்ச்சொல்லின் தோற்றம் பற்றி சுந்தரசண்முகம் குறிப்பிடுகிறார்"**[10] இதன்படி எல்லா மொழிகளிலும் பெயர் என்னும் சொற்பகுப்பே முதற்கண் வைத்துக் கூறப்படுகின்றது. தமிழ் மொழியிலும் எல்லா இலக்கண நூலாரும் பெயரையே முன்வைத்து


http://Creativecommons.org//license/by/4.0/.

கூறியுள்ளனர். **"பெயர், வினைப்பாகுபாடு மொழிக்கு முந்தியே மனித மூளையில் தோன்றியமைந்தது எனலாம்"**[11] என்று மு.வ. குறிப்பிடுகிறார். இதன் மூலம் மொழிக்கும் முற்பட்டது பெயர்ச்சொல் என்பதை அறிய முடிகிறது. பண்டைகால மக்கள் முதலில் பொருள்களின் பெயர்களைத் தான் சுட்டியிருப்பர். குழந்தைகளும் பேசத்துவங்கும் போது பெயர் சொற்களையே முன் மொழிகின்றனர். இவ்வாறு உலக வாழ்க்கையின் பெயர்ச் சொற்களே முன்வகிக்கின்றன. பெயர்ச்சொற்களுக்கு அடுத்து வினைச்சொற்கள் உருவாகின. இவ்விரு சொற்களையும் இணைத்து சொற்றொடராக பயன்படுத்தினர். ஆகவே சொற்றொடருக்கு முந்தியது சொல் என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு தோன்றியச் சொற்கள், காலப்போக்கில் மக்களின் நாகரீக வளர்ச்சியாலும், வணிக வளர்ச்சியாலும், பிற நாட்டார் வருகையாலும் பெருகின.

**பெயர் - விளக்கம்**

இலக்கண நூலாரால் முதன்மையாக சிறப்பிக்கப்பெறும் பெயர் பற்றி அகராதியியலாரும், அறிஞர்களும் பல்வேறு கருத்துக்களைச் சுட்டியுள்ளனர். **"வேற்றுமை உருபுகளாகிய சொல்திரிபு உருபுகளை ஏற்று வரும் அடிச்சொற்களே தமிழில் பெயர்ச்சொற்கள் எனப்படும்"**[12] என்றும் **"கிடத்தல் செயல் தன்மையைக் கொண்ட பெயர்ச் சொற்களைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் வகை என்று பெயர்ச்சொல்லுக்கு வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் தருகின்றது"**[13] இவர்களின் கருத்துப்படி பொருளினைச் சுட்டிக்காட்டி அதற்குக் குறியாக நிற்கும் சொற்களை பெயர்ச்சொற்கள் என வரையறுக்கலாம். இவை இடுகுறியாகவோ காரணம் கருதியோ அமையலாம். இவ்வாறு அமையும் பெயாச்சொல்லுக்கு இலக்கணிகள் பல்வேறு விளக்கங்கள் அளித்துள்ளனர்.

**பெயர் பற்றி அகராதிகளின் கருத்துகள்**

ஒரு பொருளை அழைப்பதற்கு இடுகுறியாகவும், காரணமாகவும் ஒரு பெயரினை இடுவர். அது அப்பொருளின் பெயர் ஆகும். பெயர் பற்றி அகராதிகளின் கருத்தைக் காண்போம்.

நர்மதாவின் தமிழ் அகராதி **"பெயர் என்பதற்கு வடிவு, பொருள், சபதம், shape, wealth, vow"**[14] என பெயருக்கு பொருள் விளக்கம் தருகின்றது. திருமகள் தமிழ் அகராதி **"பெயர் என்பதற்கு பேர், நாமம், புகழ், பெருமை, ஆள், வடிவு, பொருள், பெயர்ச்சொல், வேறுபடுத்து, போர், பெயர் என் ஏவல்"**[15] எனப் பெயருக்கு பொருள் விளக்கம் தருகின்றது. செந்தமிழ் அகராதி **"பெயர் என்பதற்கு காமம், புகழ், பெருமை, பொருள், சபதம், பெயர்ச்சொல், முதல் வேற்றுமை"**[16] என பெயருக்கு பொருள் விளக்கம் தருகின்றது. மெய்யப்பன் தமிழ் அகராதி **"பெயர் என்பதற்கு பேர், நாமம், புகழ், பெருமை, ஆள், வடிவு, பொருள், வஞ்சினம், பார்க்க: பெயர்ச்சொல், முதல் வேற்றுமை"**[17] என பெயருக்கு பொருள் விளக்கம் தருகின்றது. எனவே பெயர் பொருள், வடிவு, பெயர்ச்சொல், முதல் வேற்றுமை என அறிய முடிகிறது.

**பெயர்ச்சொல்**

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும். ஒரு பொருளுக்குப் பெய்து இட்டதால் பெயர் என்பது காரணக்குறியாகும். பெயர்ச் சொற்களைத் தொல்காப்பியர் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுபெயர் என பகுத்து விளக்கியுள்ளார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**தொல்காப்பியம் காட்டும் பெயர்ச்சொல்**

தொல்காப்பியத்தில் பெயர்ச் சொற்களைப் பற்றிய பொதுச்செய்திகள் வேற்றுமையியலிலும் பெயரியலிலும் காணப்படுகின்றன. வேற்றுமையியலில் பெயரின் பொது இலக்கணம் வரையறுக்கப்படுகின்றது.

தொல்காப்பியர் பெயர்ச்சொற்கள் காலம் காட்டாது எனவும், வேற்றுமை உருபுகளை ஏற்கும் இயல்புடையன என்பதையும்,

**"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா**
**தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே"** (தொல்.சொ.நூ.70)
**"கூறிய முறையின் உருபுநிலை திரியாது**
**ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப"** (தொல்.சொ.நூ.69)

என்னும் நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அமையும் பெயரினை தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார். இதனை,

**"அவற்றுள்**
**பெயர்எனப் படுபவை தெரியும் காலை**
**உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓர் அன்ன உரிமையும்**
**ஆம்மூ உருபின தோன்ற லாறே"** (தொல்.சொல்.நூ.160)

எனக் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் உயர்திணைக்கு உரியவை, அஃறிணைக்கு உரியவை, இரண்டு திணைக்கும் (விரவுதிணை) உரியவை என மூன்று வகையாகப் பகுத்துள்ளார்.

**வீரசோழியம் காட்டும் பெயர்ச்சொல்**

தொல்காப்பியத்திற்குப் பிறகு ஐந்திலக்கணம் கூறிய முதல் நூல் வீரசோழியம் ஆகும். வீரசோழியம் சொல்லதிகாரத்தில்'பெயர் மரபு' எனும் இயலை தனியாக அமைக்காமல் வேற்றுமைப் படலத்திலே கூறியுள்ளது.

வேற்றுமை படலத்திலே அடிப்படைப் பெயர்களாக ஒருவன், ஒருத்தி, ஒன்று, சிறப்பு, பல்லோர், பல என ஆறினைக் குறிப்பிடுகிறது. இதனை,

**"ஒருவன் ஒருத்தி ஒன்றாம் சிறப்பொடு பல்லோர் பலவைக்**
**கருதுமுறையில் கலப்பன வேற்றுமை காண்"** (வீ.சோ.சொ.நூ.30)

என்ற நூற்பா வழி அறியலாம். ஒருவன், ஒருத்தி, ஒன்று, பலர், பல, சிறப்பு ஒருவன், சிறப்பு ஒருத்தி, சிறப்பு ஒன்று எனப் பெயர்ச்சொற்கள் எட்டு வகைப்படும் என்று வீரசோழியம் கூறுகிறது. இவையே வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

**நன்னூல் காட்டும் பெயர்ச்சொல்**

தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்த நூல்களுள் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றிருப்பது நன்னூல் பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம் சொல்லதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. பெயரின் பொது இலக்கணமாக,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**"இடுகுறி காரண மரபோடு ஆக்கம்**
**தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா**
**வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்தொன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே"** **(நன்.சொ.நூ.275)**

இந்நூற்பா வழி குறிப்பிடுகிறார். நன்னூலார் இடுகுறி, காரணம், மரபு, ஆக்கம் என்ற நான்கு அடிப்படையில் பெயர் தோன்றலாம் என்று குறிப்பிடுகிறது.

**நேமிநாதம் காட்டும் பெயர்ச்சொல்**

ஐவகை இலக்கணங்களுள் எழுத்து, சொல் ஆகிய இரண்டை மட்டும் சுருக்கமாகத் தருவது நேமிநாதம் ஆகும். 12-ம் நூற்றாண்டில் குணவீர பண்டிதரால் நேமிநாதம் இயற்றப்பட்டது. பெயர் மரபு அதிகாரத்தில் நேமிநாதம் பெயர்ச்சொற்களை உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என திணை அடிப்படையில் பகுத்துக் கூறுகிறது.

**"பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்**
**இயற்சொல் முதனான்கும் எய்தும் - பெயர்ச்சொல்**
**உயர்திணைப்பேர் அஃறிணைப் பேர்ஒண் விரவுற்**
**றியலும் எனவுரைப்பர் ஈங்கு"** **(நே.நா.சொ.நூ.54)**

என்று பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கினையும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கோடு உறழப் பதினாறாகும் என்று சொற்களைப் பாகுபடுத்துகிறார் நேமிநாத ஆசிரியர். அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் அமையும் தன்மையை தனித்தனி நூற்பாக்கள் வழி விளக்கியுள்ளார்.

**இலக்கண விளக்கம் காட்டும் பெயர்ச்சொல்**

திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் 17-ம் நூற்றாண்டு இயற்றப்பட்ட இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், அணியதிகாரம், யாப்பதிகாரம் எனும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இலக்கண விளக்கம் பெயர்ச்சொல்லின் இலக்கணமாக,

**"பெயர்எனப் படுபவை தெரியும் காலை**
**யிடுகுறி காரண மரபோ டோக்கந்**
**தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா**
**வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்**
**றேற்பவும் பொதுவு மாகிப் பாற்படப்**
**பொருள்புலப் படுப்பன வென்மனார் புலவர்"** **(இ.வி.சொ.நூ.176)**

இடுகுறி, காரணம், மரபு, ஆக்கம் என்ற நான்கு அடிப்படையில் பெயர் தோன்றலாம் என்று சுட்டுகிறது. காலங்காட்டாமையும், வேற்றுமை உருபு ஏற்பதற்குரிய தகுதியும் உடையது. பெயரென்றும், திணை, பால், இடம் இவற்றுள் ஒன்றனையோ, பலவற்றையோ குறிக்கும் நிலையிலும் பெயரமையும் என்று குறிப்பிடுகின்றது.

**தொன்னூல் விளக்கம் காட்டும் பெயர்ச்சொல்**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

வீரமாமுனிவரால் 18-ம் நூற்றாண்டு இயற்றப்பட்ட தொன்னூல் விளக்கம் பெயருக்கரிய இலக்கணத்தைச் சுட்டுகிறது. பெயர்ச்சொற்கள் வேற்றுமை பெற்று இடம், பால், திணை காட்டியும், தொழில் காலம் காட்டாமல் வரும் என்று குறிப்பிடுகிறது.

**“பெயரே வேற்றுமை பெற்று இடம்பால் திணை**
**காட்டித் தொழில் அலகாலம் காட்டா**
**மரபு காரணம் ஆக்கம் குறி என்று**
**அவை நால் தகுதி ஆகும் என்ப”** **(தொ.வி.நூ.53)**

என்ற நூற்பாவில் பெயர்ச்சொல்லின் இலக்கணம் சுட்டப்பட்டுள்ளது. மேலும் மரபு, காரணம், ஆக்கம், இடுகுறி என பெயர்ச்சொற்களை நால்வகையாகப் பிரித்துள்ளது.

**முத்துவீரியம் காட்டும் பெயர்ச்சொல்**

முத்துவீர உபாத்தியாரால் 19-ம் நூற்றாண்டு இயற்றப்பட்ட முத்துவீரியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் எனும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டது. முத்துவீரியம் பெயர் குறித்து,

**“அவற்றுள்**
**பெயரெனப் படுபவை தெரியுங் காலை**
**உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையும்**
**ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையும்**
**ஆகு மென்மனா ரறிந்திசி னோரே”** **(மு.வீ.சொ.நூ.462)**

என்ற நூற்பாவில் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என பெயர் மூன்று வேறுபட்டன என்கிறது. மேலும் பெயர், வினைகள் இடவகையால் பொருள் உணர்த்தும் தன்மையினை,

**“படர்க்கைப் பெயர்வினை முற்றிரு திணைபால்**
**அனைத்தும் பெறப்படு மல்லன விரண்டும்**
**ஒருமையும் பன்மையும் பெறுமென மொழிப”** **(மு.வீ.சொ.நூ.470)**

படர்க்கைப் பெயர்ச்சொல்லும், படர்க்கை வினை முற்றுச் சொல்லும் இருதிணை ஐம்பாலும் பெறும். தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும் ஒருமையிலும், பன்மையிலும் வரும் என இந்நூற்பா சுட்டுகிறது.

**அறுவகை இலக்கணம் காட்டும் பெயர்ச்சொல்**

தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பெற்ற அறுவகை இலக்கணம் எனும் நூலில் தமிழ் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை எனும் அறுவகையாக அணுகுகிறது.

**“சொல்எனல் எழுத்துத் தனித்தும் சிற்சில**
**புணர்ந்துவரும் வருவன........”** **(அறு.இல.நூ.167)**

எனச் சொல்லிற்கு இலக்கணம் குறிப்பிடுகிறது. சொல் இலக்கணத்தின் பிரிவுகளாக பொது இயல்பு, பிரிவு இயல்பு, சார்பு இயல்பு, திரிபு இயல்பு என்னும் உட்பிரிவுகளைச் சுட்டுகிறது. இலக்கண நூல்கள் யாவும் சொல் இலக்கணத்தில் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்ற


http://Creativecommons.org//license/by/4.0/.

நால்வகையுள் அடக்கி இருதிணை, மூவிடம், ஐம்பால், எட்டு வேற்றுமை முதலிய சொற்களுக்கே உரிய சிறப்பிலக்கணங்களைக் கூறும். ஆனால் இவர் சொற்களை சுட்டு, பெயர், வினை, ஏவல், அமைதி, தன்மை, உரி, ஒப்பு, விளி, இரக்கம், வியன், பலவகைச் சொற்கள் எனப் பிரிந்து புதிய முறையில் விளக்கம் தருகிறது.

**"இடுகுறி காரணம் எனும் இருவகை பெயர்"** **(அறு.இல.நூ.**193)

என்று பெயர்ச்சொற்களை இடுகுறிப்பெயர் என்றும் காரணப்பெயர் என்றும் இருவகையாகப் பிரிக்கிறது. முற்காலத்தில் பெயர்ச்சொற்களை முதலில் முன்மொழிந்த மக்கள், நாகரீக வளர்ச்சிக்கேற்ப பல்வேறு சொற்களைப் பேசலாயினர். இங்ஙனம் பரந்துபட்ட நிலையில் இலக்கணமின்றி பேசப்பட்ட சொற்களுக்கு ஆசிரியர்கள் இலக்கணம் வகுத்தனர். இலக்கண நூல்களில் பெயர்ச்சொற்களின் இலக்கணமே முதலில் கூறப்படுகிறது. இவ்வாறு அனைத்து இலக்கண நூல்களிலும் பெயர்ச்சொல் இலக்கணம் பற்றி கூறும் செய்திகளில் மாறுபாடு இல்லை. பெயர்ச்சொல்லின் அமைப்பு மற்றும் பொருளுணர்த்தும் முறையிலும் வேறுபாட்டை புகுத்தவில்லை. பெயர்ச்சொல் பாகுபாடு பெயர் தோன்றுவதற்குரிய அடிப்படைக் காரணிகளைக் குறிப்பிடுவதில் வேறுபாடு காட்டவில்லை. இஃது பெயர்ச்சொற்களின் இன்றியமையா தன்மையைக் காட்டுகிறது.

**தொகுப்புரை**

- சமுதாயத்தின் கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழி முக்கியமானது. அம்மொழிக்கு சொல் என்பது மிகவும் இன்றியமையாதது.
- இலக்கணிகள் எழுத்துக்கள் சேர்ந்த நிலையினை சொல் என வரையறுத்து. அச்சொல் இலக்கணப் பொருள், சொற்பொருள் தருவதாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் சொற்களை அமைப்பு, பயன்பாடு, பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்துக்காட்டுவர்.
- மொழியியலார் சொல்லை அமைப்பு அடிப்படையில் விளக்குகின்றபொழுது உருபன் நிலையில் விளக்குவர். பொருள் தரக்கூடிய மிகச்சிறிய ஒலிக்கூறே சொல் என வரையறுக்கின்றனர்.
- அகராதியியலார் கருத்தப்படி சொல் என்பது அது தரும் பொருளின் அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றது.
- இத்தகைய சொற்களை இலக்கண நூலார் அமைப்பு நோக்கில் பெயர், வினை, இடை, உரி என்றும், வழக்கு அடிப்படையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்றும் பாகுபடுத்தியுள்ளனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

- இங்ஙனம் பாகுபடுத்திய சொற்களுள் பெயர்ச்சொற்களே முதன்மையானவை. தமிழ் மொழியில் எல்லா இலக்கண நூல்களும் பெயரையே முன்வைத்துக் கூறியுள்ளன. உலக வாழ்க்கையிலும் பெயர்ச் சொற்களே முதன்மை பெறுகின்றன. இதன் மூலம் பெயர்ச் சொல்லின் இன்றியமையாத் தன்மையை அறிய முடிகிறது.
- சொல்லுக்கு பொருள் விளக்கம் தரும் அகராதி நூல்கள் பெயர்ச் சொற்கள் என்பதற்கு இடுகுறியாகவும், காரணக் குறியாகவும் வந்து வேற்றுமை உருபுகளை ஏற்று காலம் காட்டாமல் வரும் சொற்கள் என வரையறுக்கின்றன.
- தொல்காப்பியர் பெயர்ச்சொற்கள் காலம் காட்டாது எனவும், வேற்றுமை உருபுகளை ஏற்கும் இயல்புடையன என்பதையும் சுட்டியுள்ளார். இவ்வாறு அமையும் பெயரினை தொல்காப்பியர் திணை அடிப்படையில் உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, விரவுத்திணைக்குரியன என வகைப்படுத்தியுள்ளார். மேலும் அவை பண்பின் அடிப்படையிலும் பிரித்துள்ளார்.

**<u>சான்றெண்விளக்கம்</u>**

1. செந்துறைமுத்து, தமிழின் வடிவங்கள், ப.35.
2. வரதராசன்.மு, மொழி வரலாறு, ப.53.
3. சண்முகம்.செ, பொருண்மையியல், ப.258.
4. மேலது
5. சேனாவரையர், தொல்காப்பியம் சொல்லதிகாரம், ப.2.
6. சுந்தரசண்முகனார், தமிழ் அகராதிக்கலை, ப.321.
7. குமாரசுவாமி பிள்ளை.அ.(தொ.ஆ), இலக்கியச் சொல்லகராதி, ப.111.
8. ராஜ்மோகன்.அ.(தொ.ஆ), தம்பியின் தமிழ் அகராதி, ப.174.
9. சந்தியா நடராஜன்(ப.ஆ), மதுரைத் தமிப் பேரகராதி, ப.770.
10. சுந்தர சண்முகனார், தமிழ் அகராதிக்கலை, ப.321.
11. வரதராஜன்.மு, மொழி வரலாறு, ப.53.
12. வாழ்வியற் களஞ்சியம்(தொகுதி 12), ப.368.
13. முந்நூல், (தொகுதி 2), ப.141.
14. மாருதிதாசன், நர்மதாவின் தமிழ் அகராதி, ப.691.
15. இராமசுப்பிரமணியம்,வ.த.(தொ.ஆ), திருமகள் தமிழ் அகராதி, ப.730.
16. கந்தையா.ந.சி, செந்தமிழ் அகராதி, ப.518.
17. பரமசிவம்.கு, இக்காலத் தமிழ் மரபு, பக்.96,97.


http://Creativecommons.org//license/by/4.0/.